**பாரத் நிர்மாண் ஊழியர்கள் யார்?**
**Who are Bharat Nirman Volunteers?**

பல்வேறு அரசு திட்டங்கங்கள் மூலம் இதுவரை பலன் பெறாத குடும்பங்கள் நலமடையும் வகையில், தன்னார்வமாக முன்வந்து அத்தகைய குடும்பங்கள் மற்றும் அரசுத் துறைகளுக்கிடையே இயல்பான இணைப்பாக செயல்படக்கூடிய ஊரக குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களை 'பாரத் நிர்மாண் ஊழியர்கள்' என அழைக்கலாம். சுருக்கமாக சொல்வதானால், திட்டங்களுக்கும் அவை சென்று சேர வேண்டிய மக்களுக்கும் இடையிலான சங்கிலியின் கடைசி கண்ணியாக இவர்கள் இருக்கிறார்கள்.

**பாரத் நிர்மாண் ஊழியர்கள் திட்டம் எதற்காக செயல்படுத்தப்படுகிறது?**
**Why Bharat Nirman Volunteers?**

பல பத்தாண்டுகளாக மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு நல திட்டங்களை செயல்படுத்தி வந்த போதும், வறுமைக்கோட்டுக்குகீழ் வாழும் குடும்பங்களுக்கு பலன்கள் சென்றடைவதில் நிறைய இடைவெளிகள் இருப்பதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. திட்டங்களை செயல்படுத்தும் அமைப்புகள் பல மட்டங்களில் குறைவான பணியாளர்களை கொண்டிருப்பதால், இலக்கிடப்பட்ட குடும்பங்களுக்கு பலன்கள் சென்றடைவதில் தாமதமும், இலக்கு பிழைகளும் நடக்க காரணமாகின்றன. எனவே, இச்சங்கிலியின் கடைசி கண்ணியை சிறப்பாக செயல்படுத்தும்வகையில், வாய்ப்புள்ள இளைஞர்களை பயன்படுத்தி திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சிறப்பான திட்டமிடல் மற்றும் பொறுப்புத்தன்மையுடன் நடந்துகொள்ளுதல் ஆகியவற்றுக்காக இத்திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

**இளைஞர்கள் ஏன் தன்னார்வமாக செயல்படவேண்டும்?**
**Why should they work voluntarily?**

வட்டார குழுக்களின் ஆதிக்கம், பல்வேறு சமூகத்தினரிடையே ஒற்றுமை இல்லாமை, தங்கள் பிரச்சினைகளை பற்றிய விழிப்புணர்வு இல்லாமை, அரசுத் துறைகளின் பாராமுகம், அக்கறையின்மை, ஊழல், திட்ட

செயல்பாட்டின் நடைமுறைகள் பற்றிய அறியாமை, ஆகியவை காரணமாக ஊரக வாழ்க்கை சீரழிந்துள்ளது. இதனால், பல்வேறு சமூக மேம்பாட்டு திட்டங்களை திட்டமிடல் மற்றும் செயல்பாட்டில் ஊரக மக்களின் பங்களிப்பு குறைந்து விட்டது. எனவே, ஊரக மக்களின், குறிப்பாக இளைஞர்களின் பங்களிப்பு கீழ்கண்ட காரணங்களுக்காக, தன்னார்வ முறையில் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது:

- சமூக பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தும் வாய்ப்புகளுக்களை இளைஞர்கள் எதிர் நோக்கியுள்ளனர்.
- கிராம முன்னேற்றம் என்பது தங்களின் குடும்ப முன்னேற்றமே என்பதால், தங்களுக்கு அதில் பங்கு இருப்பதாக எண்ணுகிறார்கள்
- அதே கிராமங்களில் அவர்கள் வசிப்பதால், இத்தகைய பங்களிப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறார்கள்
- தற்போது வேலை வாய்ப்பில்லாமல் உள்ள இளைஞர்கள், வேலை கிடைத்து வெளியூர் செல்லும் வரை இவ்வாறு குழுக்களில் ஈடுபடுவதி ஆர்வம் காட்டுகிறார்கள்
- தன்னார்வ வேலை மூலம் சுயமரியாதை மற்றும் அங்கீகாரம் கிடைக்கிறது
- தன்னார்வலர்கள், தங்கள் எண்ணங்கள் மற்றும் செயல்பாட்டில் குறிப்பிடத்தகுந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை உணர்கிறார்கள்
- சாதனைகள் ஏற்படும்போது, ‘நம்மால் செய்யப்பட்டது’ என்ற வெற்றி உணர்வு கிடைப்பதால், சுயமரியாதை அதிகரிக்கிறது
- ஒவ்வொரு தன்னார்வலரும், தங்கள் கிராமம் முன்னேற்றம் அடைவதில் இயல்பான அக்கறை கொண்டிருக்கிறார்கள்